Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 260

வியாழக்கிழமை
14 ஓகஸ்ட் 2025

ஆடி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



**பொலிஸ்மா அதிபராக பிரியந்த**

விரிவு பக்:- 10



போர்க்குற்றங்களுக்கு நீதியை வழங்கி

# கடந்தகாலத் தவறைச் சரிசெய்ய இலங்கைக்கு வரலாற்று வாய்ப்பு!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அறிக்கை

**ஜெனீவா, ஓகஸ்ட் 14**

**உள்நாட்டுப் போரின்போது இடம்பெற்ற குற்றங்கள் உட்பட கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு தாமதமின்றி நீதியை வழங்கவும், கடந்தகால வரலாற்றில் ஒரு காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்தவும் இலங்கை அரசாங்கத்துக்கு 'வரலாற்று வாய்ப்பு' கிட்டியுள்ளது - இவ்வாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் அறிக்கையிட்டுள்ளார்.**

10

செம்மணிப் புதைகுழி விவகாரம்;

## குற்றவாளிகள் எவரும் தப்பிப்பதற்கு விடோம்!

கடற்றொழில் அமைச்சர் உறுதி

கிளிநொச்சி, ஓக. 14
செம்மணிப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் முறையாக நடத்தப்பட்டுவருகின்றன. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளது என்று கடற்றொழில் அமைச்சர்

11

மயிலிட்டித் துறைமுகத்தில்

## தென்னிலங்கை மீனவர்களால் வடக்கு மீனவர்கள் அந்தரிப்பு

ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சரமாரிக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 14
மயிலிட்டித் துறைமுகத்தில் தென்னிலங்கை மீனவர்களின் அதீத ஆக்கிரமிப்புக் காரணமாகவும், நீண்ட காலமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள இந்திய றோலர் படகு

11

முத்துஐயன்கட்டு பதற்றம்

## சடலம் மீட்கப்பட்ட விவகாரத்தில் இராணுவத்துக்குத் தொடர்பில்லை

இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக. 14
முத்துஐயன்கட்டு குளத்தில் கபில்ராஜ் என்ற இளம் குடும்பத்தலைவர் சடலமாக மீட்கப்பட்டமைக்கும் இராணுவத்துக்கும் தொடர்பில்லை என்று இராணுவப் பேச்சாளர் வருணகமகே தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு

10

விவசாய நடவடிக்கைக்காக

## வலி.வடக்குக் காணிகளை உடனடியாக விடுவியுங்கள்

ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 14
வலி.வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகளை விடுவித்து, அந்தக் காணிகளில் மக்கள் சுதந்திரமாக விவசாய நடவடிக்கையில்

11





இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள

## மயிலிட்டி வரசித்தி விநாயகருக்கு 35 ஆண்டுகளின் பின்னர் பொங்கல்

யாழ்ப்பாணம், ஓக. 14
இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு, இடித்தழிக்கப்பட்டு தற்போதுவரை விடுவிக்கப்படாதுள்ள மயிலிட்டி அருள்மிகு வரசித்தி விநாயகருக்கு, இராணுவ முடகம்பி வேலிக்கு முன்பாக 35 ஆண்டு

11

## முத்துஐயன்கட்டு விவகாரத்தில் நீதியான விசாரணை நடக்கும்!

பொதுப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக. 14
முல்லைத்தீவு-முத்துஐயன்கட்டு இராணுவமுகாமில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை இடம்பெற்றுவருகின்றது. தவறு செய்தால்

11

### முச்சந்தி முரளி

'நிண்ட வெள்ளத்தை வந்த வெள்ளம் கொண்டுபோன கதை மாதிரித்தான் மீனவர்களின்ர வள்ளங்களின்ர நிலை கண்டியளோ'

வவுனியா - ஓமந்தையில்

## வனவளத் திணைக்களத்தினர் துப்பாக்கிமுனையில் மிரட்டல்

பொதுமக்கள் பரபரப்புக் குற்றச்சாட்டு

வவுனியா, ஓக. 14
வவுனியா ஓமந்தை கொந்தக்காரன்குளம் பகுதியில், காணி ஒன்றில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தவர்களை வனவளத் திணைக்கள அதிகாரிகள் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தியுள்ளனர் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்

11

கிளிநொச்சியிலுள்ள

## பிரபல மகளிர் பாடசாலையின் அதிபர் நியமனம் சரியானதே!

வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் விளக்கம்

கிளிநொச்சி, ஓக. 14
கிளிநொச்சியில் உள்ள பிரபல மகளிர் பாடசாலையொன்றின் அதிபர் நியமனம் தொடர்பில் சர்ச்சைகள் ஏற்பட்டிருந்த நிலையில், அந்த நியமனம் சரியானது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன்

11

மக்கள் மனம் அறிந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | | ஹந்தஹண ராசி சுப பலன் | | NLB ஜய | | மெகா பவர் | | மஹஜன சம்பத | | தன நிதானய | | அத சம்பத | | சுப தவசக் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திகதி | 13.08.2025 | திகதி | 13.08.2025 | திகதி | 13.08.2025 | திகதி | 13.08.2025 | திகதி | 13.08.2025 | திகதி | 13.08.2025 | திகதி | 13.08.2025 | திகதி | 13.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4162 | சீட்டிழுப்பு இலக்கம் | 1229 | சீட்டிழுப்பு இலக்கம் | 0188 | சீட்டிழுப்பு இலக்கம் | 2268 | சீட்டிழுப்பு இலக்கம் | 5920 | சீட்டிழுப்பு இலக்கம் | 1950 | சீட்டிழுப்பு இலக்கம் | 0495 | சீட்டிழுப்பு இலக்கம் | 0036 |
| ஆங்கில எழுத்து | H | வெற்றி இலக்கினம் | கன்னி | ஆங்கில எழுத்து | L | ஆங்கில எழுத்து | P | ஆங்கில எழுத்து | J | ஆங்கில எழுத்து | I | ஆங்கில எழுத்து | J | வெற்றி இலக்கினம் | சிங்கம் |
| | | | | | | சுப்பர் இலக்கம் | 10 | | | | | | | | |
| வெற்றி இலக்கங்கள் | 05 25 49 58 | வெற்றி இலக்கங்கள் | 10 12 13 15 | வெற்றி இலக்கங்கள் | 0 0 2 9 | வெற்றி இலக்கங்கள் | 15 17 58 59 | வெற்றி இலக்கங்கள் | 7 3 4 4 6 9 | வெற்றி இலக்கங்கள் | 07 09 15 80 | வெற்றி இலக்கங்கள் | 4 4 6 9 | வெற்றி இலக்கங்கள் | 03 20 35 41 |
| விசேட எழுத்து | H | | | | | | | | | விசேட எழுத்து | I | | | | |

# வேலைவாய்ப்பு ஆசைகாட்டி குற்றமையங்களில் ஆட்சேர்ப்பு




## பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

**கொழும்பு, ஓக.14**

**தகவல் தொழில்நுட்பத்துறையில் வேலைவாய்ப்பு வழங்குவதாகக்கூறி, இலங்கை உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களை கிழக்கு ஆசிய நாடுகளில் இயங்கும் சைபர் குற்ற மையங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் மோசடி நடக்கின்றது என்று பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.**

பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்,

இலங்கை உட்படப் பல்வேறு நாடுகளைச்சேர்ந்த 50 ஆயிரம் பேரை இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

சைபர் குற்றமையங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் நோக்கங்களுக்காக தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலைவாய்ப்பு என்றுகூறிபோலிவிளம்பரங்கள் சமூக ஊடகங்களில் பரப்பப்படுகின்றன.

கடந்த சில வாரங்களில், மோசடி நோக்கத்துடன் நடத்தப்படும் சைபர் குற்றமையங்களில் 11 இலங்கையர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளமை கண்டறியப் பட்டுள்ளது.

இலங்கையில் வசிப்பவர்களுக்கு மாத்திரமின்றி டுபாயில் பணிபுரியும் இலங்கையர்களுக்கும் தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலைகள் வழங்கப்படும் என்று கூறி, சைபர் குற்ற மையங்களில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றனர்.

தாய்லாந்து, மியான்மர், கம்போடியா மற்றும் லாவோஸ் போன்ற நாடுகளில் வேலைவாய்ப்புகள் என சமூக ஊடகங்களில் பரப்பப்படும் விளம்பரங்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 13.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0628 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 0 9 4 3 1 9 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 13.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2894 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 43 47 55 76 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 13.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 24 25 30 79 |
| வெற்றி வாரம் | 5055 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 13.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| சிம்மம் | |
| வெற்றி இலக்கம் | 03 12 20 54 |
| சீட்டிழுப்பு வாரம் | 4606 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 13.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கம் | 03 07 18 63 |
| வெற்றி வாரம் | 2070 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 13.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 23 27 74 76 |
| வெற்றி வாரம் | 2720 |

| JAYODA | |
|---|---|
| திகதி | 13.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 11 13 33 57 |
| வெற்றி வாரம் | 2152 |

# ஜனாதிபதி வாய்ப்பு நாமலுக்கு இல்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.14

அடுத்த ஜனாதிபதியாகும் வாய்ப்பு நாமல் ராஜபக்சவுக்கு அறவே இல்லை. அடுத்து ஆட்சியைப் பிடிக்கப்போவது ஐக்கிய மக்கள் சக்தியே என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தை எட்டப்போகிறது. இதுவரை உருப்படியான வேலைகள் எதையும் செய்யவில்லை. பல வாக்குறுதிகளை வழங்கினார்கள், ஆனால் ஒன்றையும் நிறைவேற்றவில்லை. அரசாங்கம் வருமானத்தைக் கூட்டுவதற்காக எந்தவொரு வேலைத்திட்டங்களையும் செய்யவில்லை. வரியை மட்டும் அதிகரித்துக்கொண்டுசெல்கிறது.

எதிர்க்கட்சியாகிய நாம் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து வருகிறோம். அடுத்த தேர்தலில் நாம் ஆட்சியைப் பிடிக்கும் வகையில் செயற்பட்டுவருகிறோம். நாமல் எப்போதாவது ஜனாதிபதியாகலாம். ஆனால் அடுத்த ஜனாதிபதியாக முடியாது. எமது கட்சி மறுசீரமைப்பு செய்துகொண்டு ஏனைய கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு முன்னோக்கிச் செல்கிறது- என்றார். (எ-75)

# ஒரேநாளில் 4,608 பேர் கைது


கொழும்பு, ஓக.14

நாடளாவிய ரீதியில் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 4ஆயிரத்து 608 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# சிங்களத்தில் நூலாக உருவாகும் செம்மணிப்புதைகுழியின் கதை

கொழும்பு, ஓக.14

செம்மணி மனிதப்புதைகுழியின் கதையைக் கேட்டபின்னர் அதைச் சிங்களத்தில் எழுதத் தீர்மானித்தோம். நாளை செம்மணி என்ற நூல் தேசிய நூலக கேட்போர் கூடத்தில் வெளியிடப்படும் என்று ஊடகவியலாளர் தரிந்து ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.




இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிருஷாந்தி குமாரசுவாமியின் படுகொலை, செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான முதற்கட்ட விசாரணைகள், இலங்கையில் காணாமல் போதல், செம்மணிப் படுகொலையின் தற்போதைய கதை, கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவின் மனைவி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஆகிய விடயங்கள் இந்த நூல் இடம்பெற்றிருக்கும்.

செம்மணிக்குச் சென்ற பின்னர் நாங்கள் செம்மணி மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக தேசிய நூலகத்துக்குச் சென்றிருந்தோம். ஆனால் செம்மணி தொடர்பாகப் பெரியளவில் தகவல்கள் இல்லை. அதனால் தரிந்து உடுவரகெதர நாங்கள் நூல் ஒன்றை வெளியிடுவோம் என்று கூறினார்.

செம்மணி தொடர்பாகப் பல தரப்புகளிடமிருந்து தகவல்களைப்பெற்றோம். ஆயிரக்கணக்கானபக்கங்களைக் கொண்ட ஆவணங்களை ஆராய்ந்தோம். வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடன் பேசினோம். குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினரின் குடும்பங்களுடன் பேசினோம். இறுதியாக நாங்கள் நூலை எழுதினோம் - என்றார். (எ-இ)

# யானை தாக்கியதில் முதியவர் படுகாயம்


**வவுனியா, ஓக.14**

**வவுனியா சின்னடம்பனில் யானை தாக்கியதில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.**

**இரவுத் தொழில் நிமித்தமாக தனது துவிச்சக்கரவண்டியில் சின்னடம்பன் வீதியின் ஊடாகப் பயணித்தபோது வீதியில் நின்ற யானை அவரைத் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடா வாகனத்தில் நல்லூர்க் கந்தன்






வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருடப் பெருந்திருவிழாவின் பதினைந்தாவது நாள் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பக்தி பூர்வமாக நடைபெற்றது. இதன்போது நல்லூர்க் கந்தவேற்பெருமான் வெள்ளி ஆட்டுக் கடா வாகனத்தில் வள்ளி - தெய்வானையருடன் வீதி உலா வந்தார். (ச-66)

## ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.14

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் ஆன்மிக அருளுரை இன்று வியாழக்கிழமை இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு 'மனத் துன்பத்தை எப்போது கடப்பேன்?' எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை நிகழ்த்துவார். (ச-41-66)

## தெய்வீக அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.14

நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இடம்பெறும் 'தெய்வீகக் கலை அர்ச்சனை' நிகழ்வில் இன்று வியாழக்கிழமை திருமதி பங்கையச்செல்வி முகுந்தன் அவர்களின் மாணவர்களின் பஜனை நிகழ்வும், அநுராகவின் கலைநிலைய மாணவர்கள் வழங்கும் பக்தி இசைக்கானங்களும், வீணை இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இதனை நடத்திவருகின்றது. (ச)

## பொங்கலும் வேள்வியும்!

யாழ்ப்பாணம், ஓக.14

யாழ். வடமராட்சி அல்வாய் வடக்கு அருள்மிகு வயல் காத்தவராயர் ஆலயப் பொங்கல் விழாவும் வேள்வியும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

காத்தவராயர் பக்தர்கள் பொங்கல் விழாவிலும் வேள்வியிலும் கலந்துகொண்டு நேர்த்திக் கடனைப் பூர்த்திசெய்துகொள்ளுமாறு ஆலயப் பரிபாலனசபையினரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-100)

## செல்லப்பா சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், ஓக.14

சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் ஈழத்துச்சித்தர் நல்லூர்த் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூசைநிகழ்வு இன்று வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

காலை அபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்குத் திருமுறை, நற்சிந்தனைப் பாடல்கள் இடம்பெற்று தொடர்ந்து மு.ப.11 மணியளவில் 'நல்லூர்த் தேரடி' எனும் தலைப்பில் ஓய்வுநிலை அதிபர் ஆ.சிவநாதன் உரையாற்றவுள்ளார். (ச-41-66)





## மடுத்திருத்தலப் பெருவிழாவின் முன்னாயத்தக் கலந்துரையாடல்

மன்னார், ஓக.14

மன்னார் மடுத் திருத்தலத்தின் ஆவணிமாத திருவிழாத் திருப்பலிக்கான முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடல் மடுத் திருத்தலத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

வருடாந்தம் மடு அன்னையின் ஆவணித் திருவிழாவில் கலந்துகொள்ள நாட்டின் பல பாகங்களிலிருந்தும் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகைதரும் நிலையில் பக்தர்களின் நலனைக் கருத்திற்கொண்டு முன்னெடுக்கப்படவேண்டிய ஏற்பாடுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அதன்படி சுகாதாரம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள், நீர் மற்றும் உணவு விநியோகம் உள்ளிட்டவை குறித்து ஆராயப்பட்டதுடன் சட்ட ஒழுங்கைப் பின்பற்றும்வகையில் பாதுகாப்பு நடவடிக்கை [illegible] (ச-41-56)

## 17 ஆம் திருவிழா




### ஒப்பிலா வீரனே வரதா

பல்லவி
உன் கருணை வேண்டி உருகியழும் பக்தர்தனை
ஒரு கணம் பாராயோ முருகா
ஓங்கார மூர்த்தியே உலகாளும் கீர்த்தியே
ஒப்பிலா வீரனே வரதா

சரணங்கள்
நின்னருளை வேண்டியே நிறைந்தருள் மனதுடன்
நிற்கின்றார் நின்தலத்தின் சூழலில்
நின்பெருமை பேசியே நிதமுன்னைத் துதித்திடும்
நின்னடியார் குறைகள் தன்னைக் கேளாயோ
(உன்கருணை)

வன்கொடுமை தாளாது வருந்திநிற்கும் நெஞ்சத்தார்
வாழ்விலொரு மாற்றந்தர மாட்டாயோ
நின்னருளா லாகாத திங்கேது முண்டோ
நெடியவே லாயுதனே சொல்வாயே
(உன்கருணை)

**கலாபூஷணம் நடராசா இராமநாதன்**

### மனிதர் நிலை பாரப்பா

அலங்காரத் தோரணையில்
ஆவணியில் தேரேறி
நாற்றிசையும் மணங்கமழ
நல்லூர்க் கந்தனைக் காண
கண்கள் கோடி தவங்கிடக்க
காலையில ஓடிவரும்
காற்றோடு கலந்துவரும்
தெவிட்டாது காதினிலே
தேன்தமிழோ ஒலித்திடுமே
மய்யமாய் நீயிருந்து
மனிதர் நிலை பார்திடப்பா

**மு.ரமேஷ்**
**விநாயகர் சாந்தை**

நிலை தடுமாறும் நிலை நீக்கிடும்
குமரா நின்தாள்
வலையெனப் பின்னுவதும்
வல்வினை வென்றிடவே
தலையிலே கரங்கள் கூப்பித்
தண்ணருள் வேண்டி நின்றால்
சிலையாக நீயும் ஏனோ
சிரிக்கின்றாய் நல்லூரானே.!

**தேவி கணேஸ், ஆனைப்பந்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். இளைய சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

**இடபம்:** பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சகோதரர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும். அனுசரித்துச்செல்வது நல்லது. பிள்ளைகளால் வீண்செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில்வாடிக்கையாளர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். உறவினர்கள்மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படும் அதனால் உடல் அசதி உண்டாகும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வீட்டுப் பராமரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர் மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். தந்தையுடனும் தந்தைவழி உறவினர்களுடனும் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்லசெய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். பிற்பகலுக்குமேல் மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், சிலருக்கு அதிகபடியான செலவுகளால் கடன்வாங்கநேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். ஆனால், நண்பர்கள் உங்கள் தேவையை அறிந்து செய்யும் உதவி ஆறுதல் தரும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வெளியில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. கடன்களில் ஒரு பகுதியைத் தந்துமுடிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குக் குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்கு தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.



# 'தென்னாடு திங்கள்' இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.14

அறுபதாவது 'தென்னாடு திங்கள்' செய்தி இதழ் வெளியீட்டு நிகழ்வு யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள செந்தமிழ் ஆகம சிவமடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் மூத்த விரிவுரையாளர் திருமதி ஜானகி அம்பாள் தர்மஜீலன், யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் நடராசா பரமேஸ்வரன், கனடா சைவநீதி அமைப்பின் தலைவர் குணாதுரைசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது தென்னாடு சைவ மாணவர் சபையின் திருக்கோயில் பணிகளில் கட்டட நிர்மாணத் திட்டம் வரைதல் பணிகளைச் சிறப்புற ஆற்றி வரும் பொறியியலாளர் அற்புதராசா முகுந்தன் கௌரவிக்கப்பட்டார். இணை நிகழ்வாகச் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டை முன்னிட்டுத் திருமதி நளாயினி பகிரதன் தொகுத்து வெளியிட்ட 'சிவத்தமிழ் நூறு' எனும் நூல் வெளியீடும் இடம்பெற்றிருந்தது. (ச-25,66)

குத்துச்சண்டைப்போட்டி


# செ்ன். பற்றிக்ஸ் கல்லூரிக்கு 2 தங்கம், 2 வெண்கலம்

யாழ்ப்பாணம், ஓக.14

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச்சண்டைப்போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி இரண்டு தங்கம் மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களைத் தனதாக்கியுள்ளது.

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட குத்துச்சண்டைப்போட்டி கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களான 16 வயது (44 -46கிலோ) எடைப்பிரிவில் ரு.சுலக்சனும் 20 வயது (46 - 49கிலோ) எடைப்பிரிவில் ரா.விசாலகனும் முதலிடங்களைப் பெற்று தங்கப் பதக்கங்களையும் அதே பிரிவில் உ.அனைக்ஸ் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் அதே 20 வயது (56 - 60கிலோ) எடைப் பிரிவில் ஆர்.றொசினோ மூன்றாம் இடத்தினைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர். (ச-27,66)



# உதயம் கனடா சங்கத்தால் சைக்கிள்கள் அன்பளிப்பு

மட்டக்களப்பு, ஓக.14

உதயம் கனடா கலாசார சங்கத்தால் மூதூர் சின்னகுளம் கிராமத்தில் 8 கிலோமீற்றர் தூரம் நடந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்குச் சைக்கிள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாக உதயம் கனடா அமைப்பின் தலைவர் ராம்போ தர்மலிங்கம் தெரிவித்தார்.

உதவித்திட்ட அமைப்பிலுள்ள முக்கியஸ்தர்களால் இந்த உதவிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (ச-25)

# பெரும்போக நெற்செய்கை முன்னாயத்தங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.14

பெரும்போக நெற்செய்கைக்கான முன்னாயத்தங்களில் விவசாயிகள் ஈடுபட்டுவருகின்றனர். கடந்த திங்கட்கிழமை பெய்த கனமழையை அடுத்து வயலை உழுது பண்படுத்தல், வரம்பு கட்டுதல், பசளை இடுதல் போன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. யாழ்.மாவட்டத்தில் இம்முறை 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹெக்டேயர் நிலத்தில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ச-25, 17, 9)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மன்னார் காற்றாலைத் திட்டத்தால் சூழலுக்கு எந்தப் பாதிப்புமில்லை

### *அமைச்சரின் கருத்துக்கு சூழல் ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு*

**கொழும்பு, ஓக.14**

**மன்னாரில் திட்டமிட்டுள்ள காற்றாலை மின்திட்டத்தால் பறவைகளுக்கும், இயற்கைச் சமநிலைக்கும் பாதிப்பு ஏற்படாது என்று எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ள நிலையில், சூழல் ஆர்வலர்கள் அதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.**

காற்றாலை மின்திட்டத்தால் பறவைகளுக்கு ஆபத்து ஏற்படும் என்று கூறப்படுவது ஆதாரமற்ற விடயம் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். மன்னாரை சில தரப்பினர் ஒரு சொர்க்கம் எனவும், அது காற்றாலைவிசையாழிகளால் அழிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கின்றனர். மன்னார் முதல் பூநகரி வடக்கு முதல் காணப்படும் பகுதி ஒரு தரிசு நிலம். மக்கள் பறவைகள் தொடர்பாகப் பேசுகின்றனர். ஆனால் அந்தப் பாதையில் பறவைகள் எவையுமில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரின் இந்தக் கருத்துக்கு சூழல் ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். சூழல் ஆர்வலர்களான மெலனி குணதிலக, ரெகான் ஜயவிக்கிரம போன்றோர் அமைச்சரின் கருத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளனர். (எ-இ)

## வீரமுனைப் படுகொலை: 35ஆம் ஆண்டு நினைவு



கொழும்பு, ஓக.14

அம்பாறை, வீரமுனைக் கிராமத்தில் 232க்கும் அதிகமான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட கொடூரச் சம்பவத்தின் 35ஆவது ஆண்டு நிறைவு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

1990ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தக் கொடூர இனப்படுகொலையில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூர்ந்து, வீரமுனையில் அமைந்துள்ள நினைவுத்தூபிக்கு முன்பாக அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டவர்களை நினைவுகூர்ந்து, தீபச்சுடர் ஏற்றி ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை அம்பாறைப் பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக் கணக்கான மக்கள் தங்கள் வீரமுனைச் சிந்தாயாத்திரைப் பிள்ளையார் கோயில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருஸ்ண மிசன் பாடசாலை வளவினுள்ளும் தஞ்சம் புகுந்திருந்தனர். 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி கும்பல் ஒன்று பொதுமக்களைச் சுட்டும் வெட்டியும் கொலைசெய்தது. (எ-இ)

## பேருந்துகளில் ஏ.ஐ.பயன்பாடு

கொழும்பு, ஓக.14

தூரப் பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடும் பஸ்களில் செயற்கை நுண்ணறிவு கமராக் கட்டமைப்பைப் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பஸ் சாரதிகளின் நடத்தைகளைக் கண்காணிக்கவும், தேவையான எச்சரிக்கை சமிஞ்சைகளை வழங்கவும் அவை பயன்படுத்தப்படவுள்ளன. (ச-இ)

## புன்னாலைக்கட்டுவனில் கைக்குண்டு மீட்பு



யாழ்ப்பாணம், ஓக.14

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு புன்னாலைக்கட்டுவன், ஜி.ஜி.பொன்னம்பலம் வீதியில் உள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த காணியை உரிமையாளர்கள் நேற்றுத் துப்புரவு செய்தவேளை கைக்குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது.

இது குறித்து சுன்னாகம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து பொலிஸார் விடயத்தை மல்லாகம் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசென்ற நிலையில் குறித்த குண்டை மீட்டுச் செயலிழக்க விசேட அதிரடிப் படையினருக்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-27)

## *ஏன் மாத்தினவை?*

**கள்ளனுக்குத் தேள் கொட்டினால் என்ன செய்வம்? தேள் ஒரு விசப்பூச்சி. அது அழிக்கப்படத்தான் வேணும். றோட்டில போய்வாறவைக்கு அந்தத் தேள் கடிச்சால் விளக்குமாத்தால அடிச்சுக் கொல்லத்தான் வேணும். ஆனால் களவெடுக்கப் போனவருக்கு தேள் கடிச்சுட்டு எண்டதுக்காக அப்பாவிக்கள்ளனுக்குத் தேள் கடிச்சுப் போட்டுது. அதுக்காக தேளைக் கலைக்க ஹர்த்தால் வைப்பம்" எண்டு வெளிக்கிட்டால் அது சரியோ? சிலர் தங்கட சுயநலனுக்காக, ஆமியோட கூட்டு வைச்சிருந்த ஒராள் தண்ணியில தவறி விழுந்து செத்ததை வேறமாதிரிக் காட்டி, அதுக்காக ஹர்த்தால் வைக்க வெளிக்கிட்டால் என்ன நடக்குமெண்டதைச் சனம் பார்த்துக்கொண்டுதான் இருக்குது. தங்கட அரசியல் மதிப்பை சனத்திட்ட கூட்டுறதுக்காகத்தான் உந்தக் ஹர்த்தாலை வீட்டுக்கட்சியின்ர சட்டாம்பியார் அறிவிச்சவர். ஆனால் அவரின்ர கெட்டநேரம் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிக்கிறதுக்குப் பதிலா எல்லாப் பக்கமும் எதிர்ப்பலைதான் வந்தது.**

**மடுத்திருவிழா, நல்லூர்த்திருவிழா எண்டு சனப்புழக்கம் கூடவா உள்ள காலத்தில இப்பிடி ஹர்த்தாலை வைச்சது பிழை எண்டு கட்சிக்குள்ளேயே கடும் புகைச்சல். அதைப் பற்றி வீட்டுக்கட்சியின்ர அரசியல்குழுக்காரர் வட்ஸப்பில கூடிக் கதைச்சவை. அதிலை கொஞ்சப்பேர் "நல்லூர், மடு எண்டு திருவிழாக் காலம். அதால வேற ஒரு நாளைக்கு ஹர்த்தாலை வைக்கிறதுதான் சரி. ஆயர்மாரும் பின்னுக்கு வைக்கச் சொல்லிக் கேக்கினம்" எண்டு சொல்லியிருக்கினம். ஆனால் "உந்தத் திருவிழாக்கள் நெடுக நடந்துகொண்டிருக்கத்தான் போகுது. அதுக்காக ஹர்த்தாலை பின்னுக்குப் போடேலாது. கடையைத் தானே அடைக்கச் சொல்லுறம். பஸ்ஸுகள் ஓடும்தானே" எண்டு அழுங்குப்பிடியில நிண்டிருக்கிறார் சட்டாம்பியார். அவர் சொல்லுற எல்லாத்துக்கும் மட்டக்களப்பு சண்டித்தன எம்.பி.யும் தாளம் போட்டிருக்கிறார். அவை ரண்டுபேரும் தானே கட்சிக்குள்ள குறுக்கால ஓடுற ஆக்கள். சாடிக் கேத்த மூடியா அவை ரண்டுபேரும் ஓகஸ்ட் 15தான் ஹர்த்தால் எண்டு ஒற்றைக்காலில நிண்டிருக்கினம். இந்த ரண்டுபேரும் வைச்சதுதான் இப்ப வீட்டுக்கட்சிக்குள்ள சட்டம் எண்டதால மற்றவையும் வாயைப் பொத்திக்கொண்டு இருந்திருக்கினம்.**


**இப்பிடியிருக்கேக்க திடீரெண்டு "மடுத்திருவிழாவுக்காகவும், நல்லூருக்காகவும் ஓகஸ்ட் 18 ஆம் திகதி ஹர்த்தாலைப் பின்னுக்குப் போடுறம்" எண்டு சட்டாம்பியார் அறிவிச்சிருக்கிறார். இதே திருவிழாக்களைச் சொல்லி ஹர்த்தாலைப் பின்னுக்குப் போடுங்கோ எண்டு கட்சிக்காரரோ, ஆயரோ சொல்லேக்க அதுக்கு மாட்டன் எண்டவருக்கு என்னெண்டு இப்பிடித் திடீர் ஞானோதயம் வந்ததெண்டு ஒருத்தருக்கும் விளங்கேலை. கூடுதலா ஏதும் வாசிகசாலைக்காரர், கோயில்காரர் லொத்தர் ரிக்கெற் வித்துப்போட்டு, குலுக்கல் தினத்தை பின்னுக்குப் போடுறமாதிரி முதல்முறையா ஹர்த்தாலை அறிவிச்சு, அதைப் பின்னுக்குப் போட்ட சம்பவம் இப்பதான் நடந்திருக்குது. எதையும் பிளான் பண்ணாமல் திடுதிப்பெண்டு, தங்களுக்கு காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள நினைச்சால் இப்பிடிச் சறுக்கத்தான் செய்யும்.**

**ஆனால் எல்லாரும் நினைக்கிறமாதிரி மடுவுக்காகவோ, நல்லூருக்காகவோ உந்தக் ஹர்த்தால் பின்னுக்குப் போகேலை. அப்ப என்னத்துக்காக பிற்போட்டவை? ஏனெண்டால் ஓகஸ்ட் 15தான் இந்தியாவின்ர சுதந்திர தினமாம். இப்ப எல்லாத்தையும் கூட்டிக் கழிச்சுப் பாத்தியள் எண்டால் எந்த மணிகட்டின மாடு சொல்லி, சட்டாம்பியார் ஹர்த்தாலைப் பின்னுக்குப் போட்டிருப்பார் எண்டது விளங்கும்.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மடுத் திருவிழாவையொட்டி

# நீர்கொழும்பிலிருந்து விசேட ரயில் சேவை

மன்னார், ஓக.14

மன்னார் மடுப் பெருவிழாவை முன்னிட்டு வழமையான கொழும்புக் கோட்டையிலிருந்து தலைமன்னாருக்கு இடம்பெற்றுவரும் ரயில் சேவையுடன் இம்முறை நீர்கொழும்பிலிருந்து மடுவுக்கு விசேட ரயில் சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மன்னார் மடுத்திருவிழா இடம்பெறவுள்ளது. அதனை முன்னிட்டு பக்தர்களின் நலன்கருதி இந்த விசேட ரயில் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இந்த ரயில்சேவை நேற்றுப் புதன்கிழமை இரவு 9 மணிக்கு நீர்கொழும்பில் இருந்து ஆரம்பமாகியது திருவிழா முடிந்த பின்னர் மீண்டும் மாலை 4 மணிக்குப் புறப்பட்டு நீர்கொழும்புக்கு இரவு 22.50 மணிக்குச் சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மொறட்டுவவில் இருந்தும் மடுமாதா திருத்தலத்துக்கு மற்றொரு ரயிலும் இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-60)

# வவுனியா பொருளாதார மத்திய நிலையம் செப்ரெம்பர் முற்பகுதியில் செயற்படும்!

### வவுனியாவில் வர்த்தக அமைச்சர் உறுதி

**வவுனியா, ஓக.14**

**வவுனியா மதவுவைத்தகுளத்தில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தை எதிர்வரும் செப்ரெம்பர் முற்பகுதிக்குள் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான திருத்தப்பணிகள் இம்மாத இறுதிக்குள் நிறைவுறுத்தப்படும் என்று வர்த்தக வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தை வர்த்தக அமைச்சர் நேற்றுப் புதன்கிழமை பார்வையிட்டார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 8வருடங்களுக்கு முன்பு வவுனியாவில் 200 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான முதலீட்டில் அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையம் இதுவரை இயங்காமலுள்ளது.

எனவே இம்மாத இறுதிக்குள் இதில் செய்யவேண்டிய திருத்தப் பணிகளைச் செய்துவிட்டு எதிர்வரும் மாதம் முற்பகுதிக்குள் அதனைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் ஏற்கனவே வவுனியா மொத்த வியாபாரச் சந்தையில் உள்ள 35வியாபாரிகளுக்கு மத்தியநிலையத்தில் உள்ள கடைகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

மிகுதி 15 கடைகள் விவசாய அமைப்புகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் - என்றார். (ச-110)

# கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஓக.14

2025,2026 மனிதவள மேலாண்மை கற்கைநெறிக்கான விண்ணப்பங் கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம் மற்றும் முதல் மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருப்பதோடு அவற்றுள் குறைந்தது 2 பாடங்களில் திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் அல்லது 30 கிரடிற் கொண்ட SLQF நிலை 1 மற்றும் அதற்கு மேற்பட்ட அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஏதேனும் சான்றிதழ் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான புலத்தில் NVQF மட்டம் 3 இல் சித்தி அடைந்திருத்தல் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமமான அல்லது உயர் தகைமைகள் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களுக்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுன் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும்மற்றும் 0212223374 எனும் இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-25)



# வெள்ளம் சூழ்ந்துள்ள பளை பொதுச்சந்தை!

கிளிநொச்சி, ஓக.14

பளை பொதுச்சந்தையில் அண்மையில் பெய்த கனமழை காரணமாக வெள்ளநீர் தேங்கிக் காணப்படுகிறது. இதனால் சந்தைக்கு வந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். (ச-25, 27)


# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following works:

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| I | YA/CWP/CW/C1/2025/01 | Construction of Building, Services and Related Structures for Engineering Technology and Bio system Technology, University of Jaffna at Ariviyalnagr, Kilinochchi – Phase II (Stage II) | 179.89 | 365 | C4 or above | Rs. 1,800,000.00 06.01.2026 | Rs. 30,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs.
Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 15th August 2025 until 8th September 2025 from 9:00 hrs to 16:00 hrs and upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank with the Reference No "970000060000276" should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch, to reach on or before 10.00 hrs on the 9th September, 2025. Bids will be opened soon after closing, at 10.00 hrs on the 9th September, 2025 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 91 Days from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 11 in the Bidding document.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna."
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 17.1 of the bidding data
9. Pre bid meeting will be held at the Board Room, Faculty of Technology, University of Jaffna, Kilinochchi at 10.30 hrs on the 1st September, 2025.

Chairman,
Department Procurement Committee,
University of Jaffna,
12.08.2025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

நீங்கள் செய்கின்ற செயலை நேசித்துச் செய்தால், நீங்கள் வெற்றியடைவீர்கள்.

– ஆல்பர்ட் ஸ்வைட்ஸர்–

# அழிவின் திசைநோக்கி...

ஏற்றுமதிக்காகவும் மருந்து உற்பத்திக்காகவும் கஞ்சாவைப் பயிரிடுவதற்கு ஐந்துக்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது எனத் தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. இலங்கையில் பயிரிடப்படும் அனைத்துக் கஞ்சாவும் ஏற்றுமதி செய்யப்படுவதை உறுதிசெய்யவேண்டும், இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் சிறப்புக் குழுவொன்று எந்நேரமும் கண்காணிப்புச்செலுத்தும் என்பவை உள்ளிட்ட கடுமையான நிபந்தனைகளுக்குக் கீழ் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. நாட்டின் கடன்களை அடைப்பதற்காகவும் ஏற்றுமதிமூலம் கிடைக்கும் வருவாயையும் - டொலரையும் அதிகரிப்பதற்காகவும் கஞ்சாவை இலங்கையில் பயிரிடவேண்டும் என்ற கோரிக்கை கடந்த சில வருடங்களாகவே வலுப்பெற்றிருந்தது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டயானா கமகேதான் இந்தக் கருத்தை -யோசனையை முதன்முதலில் முன்வைத்தார். ஆரம்பத்தில் கேலிக்குள்ளாகியிருந்த அவருடைய கருத்து காலப்போக்கில் பரிசீலிக்கப்பட்டு இன்று சரியென்றாகியிருக்கின்றது.

கஞ்சாவைப் பயிரிட்டு வருமானமீட்டிய நாடுகள் உலகில் பல உள்ளன. ஆனால், காலப்போக்கில் அந்த நாடுகள் வாழ்விழந்து, வருமானமிழந்து, வரலாற்றையும் இழந்தன என்பதே கடந்தகாலப்பதிவுகள். உலகில் கஞ்சாவை சட்டபூர்வமாகப் பயிரிட்ட முதல் நாடாக தென்னமரிக்கக் கண்டத்தின் உருகுவே காணப்படுகின்றது. முதலாவது காற்பந்தாட்டக் கிண்ணத்தைக் கைப்பற்றிய நாடும் உருகுவேதான். முன்னொரு காலத்தில் காற்பந்தாட்டம் என்றாலே உருகுவேதான். உருகுவேயைத் தாண்டினால்தான் வேறெந்த நாடுகளும் -அணிகளும் காற்பந்தாட்டத்தின் உயரிய மகுடங்களைத் தொட்டுப்பார்க்க முடியும். ஆனால் இன்று காற்பந்தாட்டத்தை கஞ்சா பிரதியீடு செய்திருக்கின்றது. 'கஞ்சா என்றாலே அது உருகுவேதான்' என்பதே இன்றைய நிலை. இத்தனைக்கும் வெளிநாட்டு ஏற்றுமதி மற்றும் மருத்துவத் தேவைகள் கருதியே கஞ்சாவைப் பயிரிட ஆரம்பித்தது உருகுவே. ஆனால், ஏற்றுமதிக்காகவும் மருத்துவத்துக்காகவும்தான் அங்கு கஞ்சா பயன்பட்டதா என்றால், 'இல்லை' என்பதுதான் இரண்டாம் கருத்தின்றிய ஒற்றைப் பதில். இதன் விளைவாக கடந்த 30 ஆண்டுகளில் 300 மடங்கு கஞ்சாப் பாவனை உருகுவேயில் அதிகரித்து அந்த நாட்டின் இளைஞர் சமூகத்தை ஒட்டுமொத்தமாக விழுங்கியிருக்கின்றது.

உருகுவேயில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள் என எல்லோருடைய கைகளிலும் கஞ்சா தாராளம். தற்போதைய நிலவரத்தின்படி, 18 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் அரச மருந்தகங்களில் மாதத்துக்கு 40 கிராம் கஞ்சாவை வாங்கிக்கொள்ளலாம். ஒவ்வொரு குடிமகனும் தனது வீட்டில் 6 கஞ்சாச் செடிகளை வளர்க்கலாம். 15 முதல் 45 பேர் இணைந்து தனிச்சங்கம் தொடங்கி ஆண்டுக்கு 99 கஞ்சாச் செடிகள்வரை வளர்க்கலாம். இதன் தாக்கம் உருகுவேயில் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தத் தென்னமரிக்கக் கண்டத்துக்கும் வியாபித்து இன்று போதைப்பொருள்களின் சொர்க்கபுரியாக தென்னமரிக்கக் கண்டம் மாறியிருக்கின்றது. அந்த சொர்க்கபுரியின் இதயம் என்னவோ இன்றளவும் உருகுவேதான். கஞ்சாவால் கிடைத்த வருவாயை விடவும் அதனால் உருகுவே இழந்ததுதான் அதிகம்.

எனவே, கஞ்சாவைப் பயிரிடுவது தொடர்பில் ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எடுத்துள்ள முடிவு மிக ஆபத்தானது. ஒருவகையில் இது கத்திமுனை நடை. கஞ்சா என்னும் சட்டவிரோத போதைப்பொருளைக் கட்டுப்படுத்துங்கள் என்று மக்கள் அவலக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கையில் அதற்கு சட்ட அங்கீகாரத்தைத் தேடமுயல்வது பெரும் அபத்தம்.




# மாவட்ட அபிவிருத்திக்கு ரூ.2,000 மில். ஒதுக்கீடு

கொழும்பு, ஓக.14

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய நாடு தழுவிய முயற்சியான மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படுத்த, 2025 தேசிய வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து 2 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல், சேவை வழங்கலை மேம்படுத்துதல், வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் நிறுவனத் திறன்களை வலுப்படுத்துதல் ஆகியவற்றை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்ட வறுமை நிலைகளின் அடிப்படையில், பல பரிமாண வறுமைக் குறியீட்டைப் பயன்படுத்தி மாவட்டங்களுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்படும்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் இதற்கான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (ஏ-இ)

## 200 ரூபா இலஞ்சம்; ஒருவர் கைது

கொழும்பு, ஓக.14

பேருந்து அட்டவணையில் கையொப்பமிடுவதற்காக 200 ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நேரக் கண்காணிப்பாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பேருந்தின் இயக்க நேரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் திட்டமிடப்பட்ட அனைத்துப் பயணங்களையும் வழங்குவதற்கு அவர் இலஞ்சம் கோரினார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## குற்றச்செயல்களை முறையிடுவதற்கு வட்ஸ் அப் இலக்கம்

கொழும்பு, ஓக.14

நாட்டில் இடம்பெறும் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் முறையிடுவதற்கு வட்ஸ்அப் தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அதன்படி, பொதுமக்கள் அனைவரும் 0718598888 என்ற வட்ஸ்அப் தொலைபேசி இலக்கம் ஊடாக நாட்டில் இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் முறையிடமுடியும்.

இந்த வட்ஸ்அப் தொலைபேசி இலக்கம் 24 மணிநேரமும் சேவையில் இருக்கும் என்றும் என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## மின்சாரம் தாக்கி இருவர் பலி

கொழும்பு, ஓக.14

காலி கெருகெட்டியப் பகுதியில் உள்ள வயலில் மின்சாரவேலியில் சிக்குண்டு இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் என உரகஸ்மன்ஹந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. (ச-இ)

## வெளிநாட்டு ஆசைகாட்டி பணமோசடி செய்தவர் கைது

கொழும்பு, ஓக.14

ருமேனியாவில் வேலை வாங்கித்தருவதாகக்கூறி, இளைஞரொருவரிடம் 9 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் முகாமையாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


நாரஹேன்பிட்டவில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் ஒன்றில் நடத்தப்பட்ட சோதனையின்போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வளர்மதியாளின் இதய அஞ்சலி

பிறப்பு
03 . 10 . 1954



இறப்பு
13 . 08 . 2025

### செல்லத்துரை செல்வராசா (நாதன்)

**(வளர்மதி ஸ்தாபகர், எம் பெரும் தலைவர்)**

"வளர்மதியாள் தன் மூத்த புதல்வனை இழந்து ஆறா துயரில் ஆழ்ந்துள்ளாள். நாதன் அவர்கள் கடந்த அரை நூற்றாண்டு காலங்களிற்கு மேலாக சமூகப்பணியில் குறிப்பாக வளர்மதியாளின் வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்தவர்.

பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள், வளர்ந்தோர், சிறுவர்கள் என அவர்களை சிறந்தன சமூகத்தொண்டர்களாய், செயற்பாட்டளர்களாய் ஆளுமைமிக்க தலைவர்களாய் மாற்றிய மாபெரும் தலைவனாவார்.

வளர்மதி சமூகத்திற்கு மட்டுமின்றி கொக்குவில் கிராமத்திற்கும் எமது சமூகத்திற்கும் தன் ஆளுமைமிக்க அர்ப்பணிப்பான சேவையினால் சமூகத்தின் நல்வாழ்விற்கும் மேம்பாட்டிற்காகவும் தன்வாழ்நாளை பெறுமதியாக்கியவர்.

அமரர் 13.08.2025 இலிருந்து சமூக சிந்தனையை நிறுத்தி ஆழ்ந்த உறக்கத்தில் அமைதிகொண்டுவிட்டார்.

அன்னாரிற்கு எமது இறுதி இதய அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும் சனசமூக நிலையமும்**
**வளர்மதி நிறைவாழ்வகம்**
**வளர்மதி மகளிர் அமைப்பு**

(CS 30321) E

## மரண அறிவித்தல்

பிறப்பு
03 ★ 10 ★ 1954



இறப்பு
13 ★ 08 ★ 2025

கொக்குவில் கிழக்கு நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வராசா (நாதன்) 13.08.2025 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - விஜயலக்ஷ்மி ஆகியோரின் மூத்த மகனும் , காலஞ்சென்ற பொன்னம்பலம் - கமலாம்பிகை ஆகியோரின் மருமகனும், சுவேந்திரா தேவியின் (ரஞ்சி) பாசமிகு கணவரும், மயூரிகா (லண்டன்), கபிலன் (ஐக்கிய அரபு அமீரகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்ஷனின் அன்பு மாமனாரும், அமுதாம்பிகை, காலம்சென்ற இளமுருகன், சிவகுமார், கமலாம்பிகை, செல்வகுமார், சகாதேவன், ஸ்ரீனிவாசன், குகதாஸ், தணிகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கமலநாயகி, பாலகுமார், சௌந்தரராஜன், நந்தகுமார், அருணாதேவி, ராஜ்குமார், புவனேந்திரகுமார் ஆகியோரின் மைத்துனரும், விகாஷன் மற்றும் ஹர்ஷினி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நந்தாவில் லேன் , கொக்குவில் கிழக்கு இல்லத்தில் வைக்கப்பட்டு 15.08.2025 (வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணிக்கு இறுதிசடங்குகள் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர் (நந்தாவில் லேன், கொக்குவில்)

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 03 . 1974



மறைவு
12 . 08 . 2025

### செல்வகுலசிங்கம் பேரின்பநாயகி (இன்பம்)

பாலாவியைப் பிறப்பிடமாகவும், விழுபளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வகுலசிங்கம் பேரின்பநாயகி (இன்பம்) அவர்கள் நேற்றுமுன்தினம் (12.08.2025) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் - அருந்தவநாயகி தம்பதியரின் பாசமிகு மகளும், செல்வகுலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், நர்மிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திஷாரா (எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுவேதினி, சுவேந்திரன், அருட்சோதி, தேனுஷா காலஞ்சென்ற தேவகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 01.00 மணியளவில் இராமியன்வெளி (எழுதுமட்டுவாழ்) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

**எழுதுமட்டுவாழ்.**

(CR/59105) J-1

## மரண அறிவித்தல்

மலர்வு
23 . 05 . 1978



உதிர்வு
12 . 08 . 2025

### மத்தியூஸ் நிரஞ்சன்

பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மத்தியூஸ் நிரஞ்சன் அவர்கள் கடந்த (12.08.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் மத்தியூஸ் - பிலோமினா (பொன்றோஸ்) தம்பதியரின் பாசமிகு மகனும், டேவிற் கிறிஸ்ரி (சின்னராசா) - லூர்த்தம்மா (லூட்ஸ்) தம்பதியரின் பாசமிகு மருமகனும், Dr.றொமினி (சிரேஸ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புக் கணவரும், நிரோன் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி), நிரோலின் (யா/ புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிஆராதனை இன்று (14.08.2025) வியாழக்கிழமை பிற்பகல் 03.30 மணியளவில் பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**106/1, கொழும்புத்துறை வீதி,**
**சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**மனைவி, பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக அமைச்சருக்காக பிற்போடப்பட்டது கூட்டம்

## பொது அமைப்புகள் விசனம்

யாழ்ப்பாணம், ஓக.14
தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்தநிலையில் திடீரெனக் குறித்த கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.
குறித்த கூட்டத்துக்கு பிரதேச செயலாளரால் கலந்துகொள்ளவேண்டியவர்களுக்கு கடிதம்மூலம் கடந்தவாரம் தெரியப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்டத்துக்கு வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க வருகைதந்திருந்த நிலையில் அவரின் விஜயத்தில் பங்கேற்பதற்கே குறித்த கூட்டத்தை அவர் பிற்போட்டாரா? எனப் பொது அமைப்புகள் கேள்வியெழுப்பியுள்ளன. (ச-28)

**கார் விற்பனைக்கு**
Nissan Tradsunny B12 கார் விற்பனைக்கு
Year 1988, Engine 1300 cc, Gears 5,
Air conditioning Working, Power Steering,
Power Break.
தொடர்பு:- 076 736 6655
0777 495 956

**நேரடி ஒளிபரப்பு**
உங்கள் இல்லத்து நிகழ்வுகளை நேரலையாக ஒளிபரப்ப தொடர்பு கொள்ளுங்கள்.
077 6405572
யாழ் செந்தமிழன் ஸ்ரூடியோ

**மணல் விற்பனைக்கு உண்டு**
கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. யாழ் மாவட்டத்துக்கு 55,000 தொடக்கம் 65,000 ரூபாய்க்கு விநியோகம் செய்யப்படும்.
தொடர்புகளுக்கு:
077 412 1100, 076 348 8121

# ஏற்றுமதி நடவடிக்கைக்காக கஞ்சா உற்பத்திக்கு அனுமதி

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.14**
**முதலீட்டு வலயங்களில் ஏற்றுமதிக்காக மட்டுமே கஞ்சா உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடும் வரையறைகள் பாதுகாப்புக்கு மத்தியில் முதலீட்டுச்சபை மற்றும் ஆயுள்வேதத் திணைக்களம் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துவருகின்றன என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
முதலீட்டு வலயங்களில் கஞ்சா உற்பத்திக்கு 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான விதிமுறைகளும் அப்போதைய காலகட்டத்திலேயே தயாரிக்கப்பட்டன. முதலீட்டுச் சபையை தொடர்புபடுத்தி இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கமுடியும். எனினும் கடந்த காலங்களில் இதற்காக 7 முதலீட்டாளர்கள் முன்வந்தபோதும், இதற்கான வழிமுறைகளில் காணப்பட்ட குறைபாடுகளால் காலதாமதம் ஏற்பட்டிருந்தது.
இதற்கு ஆயுள்வேத திணைக்களத்திடமும் அனுமதி பெறப்பட வேண்டும். சுற்றுலா அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு போன்ற மேலும் பல நிறுவனங் களிடம் அனுமதி பெற வேண்டியுள்ளது. கடும் பாதுகாப்பு விதிமுறை களுக்கமையவே இதற்கான அனுமதி வழங்கப்படும். உற்பத்தியின் அனைத்துப் பங்குகளும் ஏற்றுமதிக்காகவே அனுமதிக்கப்படும். முதலீட்டு வலயங்களில் மாத்திரமே இந்த உற்பத்திகள் இடம் பெறும்.
அவ்வாறு செய்தால் மாத்திரமே முதலீட்டாளர்களுக்கு நிவாரணத் தையும் வரையறைகளையும் வழங்கமுடியும். இது கடும் கட்டுப்பாடுகளுக்குள் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டமாகும்- என்றார். (ஏ-இ)

# யாழ்.மாவட்டச் செயலருடன் தமிழரசின் தலைவர் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஓக.14
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும், வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வி.கே.சிவஞானம் யாழ்.மாவட்டச் செயலர் ம. பிரதீபனை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.
இதன்போது கல்லுண்டாய்ப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கழிவகற்றல் செயற்பாடுகள், யாழ்ப்பாணத்துக்கான கழிவு முகாமைத்துவம், பாலியாற்றிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான குடிநீரைக் கொண்டுவருதல் மற்றும் செம்மணியில் ஏற்கனவே உப்பளமிருந்த இடத்தில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும்போது சாத்தியப்பாட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகிய விடயங் கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ச-25,66)

# வெங்காயம் பாதிப்பு; தரவுகள் திரட்டல்

யாழ்ப்பாணம், ஓக.14
யாழ்.மாவட்டத்தில் வெள்ளத்தில் மூழ்கிய வெங்காயப் பயிர்களின் தரவுகள் திரட்டும்பணியில் விவசாயத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. கடந்ததிங்கட்கிழமை காலை கொட்டித் தீர்த்த கன மழையால் புத்தூர், சண்டிலிப்பாய், இளவாலை போன்றதாழ்ந்த பகுதிகளில் கூடுதலாகப் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளன. (ச-41-17)



# ஆளுநர்களால் மாகாணங்கள் ஆளப்படக்கூடாது

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.14
ஆளுநர்கள் ஊடாக மாகாணசபைகளை ஆள்வது தவறாகும். எனவே அடுத்த வருடம் முற்பகுதியில் அரசாங்கம் தேர்தலை நடத்த வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில்,
நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு 5 வருடங்கள் போதாது, 15 வருடங்கள் தேவையென சீனத் தலைவர்கள் கூறினார்கள் என ஜே.வி.பி.யின் செயலாளர் நாயகம் கூறியுள்ளார். 15 வருடங்கள் ஆள வேண்டுமெனில் அதற்குத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.
குறைந்தபட்சம் மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் மக்கள் எந்தநிலைப்பாட்டில் உள்ளனர் என்பது இந்த அரசாங்கத்துக்குத் தெரியவரும். எனவே, அடுத்த வருடம் முற்பகுதியில் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்குச் சவால் விடுக்கின்றோம்.
மாகாணசபை முறைமையென்பது அரசமைப்பின் ஓர் அங்கமாகும். எனவே, அந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே வடக்கு மற்றும் தெற்கு மக்களின் கோரிக்கையாக உள்ளது- என்றார். (ச-44)

**மரண அறிவித்தல்**

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 27.04.1982 |  | 12.08.2025 |

**சிவகுமாரன் ஓம்பிரகாஷ்**

யாழ்ப்பாணம் நாவலர் வீதியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் வீதியைப் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமாரன் ஓம்பிரகாஷ் அவர்கள் நேற்று முன்தினம் (12.08.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சிவகுமாரன் (பகவான் மருந்தக உரிமையாளர்) மற்றும் சகுந்தலாதேவி தம்பதியரின் பாசமிகு மகனும் லகுசியாமா, ஜனனி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவரூபன், கமலதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவாஜனா, அக்ஷய், அக்ஷரா, அக்ஷித் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் இராசலக்சுமி காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், சந்தானலக்சுமி ஆகியோரின் மருமகனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகவல் 12..00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல 30, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 8293
077 217 2303

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை

# இருட்டடிப்புச் செய்வது எமது நோக்கம் அல்ல

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 14

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை இருட்டடிப்பு செய்யும் நோக்கிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுகின்றது என ஆளுங்கட்சியால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்ததாவது:

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெறுவதற்கு தடையாக உள்ள காரணிகளை அரசாங்கம் சீர்செய்ய வேண்டும். அந்த வகையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க முற்படுவதற்கு பதிலாக பிரதி பாதுகாப்பு அமைச்சரை தற்காலிகமாக பதவிநீக்கம் செய்ய வேண்டும். விசாரணைகளில் அவர் குற்றவாளியா அல்லது இல்லையா என்பது நிரூபணமாகும்.

இது தொடர்பில் அரசாங்கத்தக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டை அரசாங்கம்மீது சுமத்துவதற்கு எதிரணி முற்படுகின்றது என அமைச்சரவைப் பேச்சாளர் குறிப்பிடுகின்றார். எமக்கு அவ்வாறு எந்தவொரு நோக்கமும் இல்லை. பொறுப்புக்கூற வேண்டிய தரப்புகளை அடையாளம் கண்டு, நீதியை வழங்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்' - என்றார். (ம-44)


# INVITATION FOR BIDS
# THUNUKKAI PRADESHIYA SABHA

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Thunukkai Pradeshiya Sabha,Vellankulam Road, Thunukkai invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB)
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | Document Issuing/Purchasing Period | | | From 14.08.2025 until 27.08.2025 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 21.08.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 02.30 P.M on 28.08.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 1 | PSDG/NP/MU/TKPS/2025/WM/01 | Consturction of Waste Collecting Center at Thunukkai PS Head Office | PSDG Fund | 1.27 | 63 | C9 above (Building) | 1500.00 | 29-Oct-2025 | 20,000.00 | 26-Nov-2025 |

A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai (T.P: 021 228 4532, email: psthunukkai@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.

5. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the Chairman, Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai and Bids (Original & Duplicate) S/No from 05 to 07 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thuukkai on or before 02.30 P.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai.
6. Pre-Bid Conference will be held at Conference Hall, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukai commencing at 10.30 AM as stated in table above.
7. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Divisional Procurement Committee,
Thunukkai Pradeshiya Sabha,
Vellankulam Road, Thunukkai. 14.08.2025


### பொலிஸ்மா...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வால் புதிய பொலிஸ்மா அதிபராக சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய வுக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி யின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்துக் கையளித்தார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 37ஆவது பொலிஸ்மா அதிபராக சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய பதிவாகியுள்ளார். (அ-ம)

### சடலம்...

வீதியில் உள்ள முகாமுக்குள் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி இரவு சிலர் நுழைய முற்பட்டுள்ளனர். இதன்போது, அவர்களை முகாமுக்குள் நுழைய விடாமல் இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினார் கள்.

முகாமுக்குள் நுழைய முற்பட்டவர்களில் ஒருவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். ஏனையவர்கள் தப்பியோடிவிட்டனர். தப்பியோடியவர்களை இராணுவத்தினர் துரத்திக்கூட செல்லவில்லை. எனவே, இராணுவத்தினர் இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்றும், இராணுவத்தினர் துரத்தியதால்தான் அந்த இளைஞர்கள் குளத்துக்குள் பாய்ந்தனர் என்றும் வெளிவரும் தகவல்களில் எந்த உண்மையும் இல்லை.

பொலிஸாரால் மூன்று இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர். எவரும் கபில்ராஜின் சடலம் மீட்கப்பட்டமை தொடர் பில் கைது செய்யப்படவில்லை. பொலிஸாரின் விசாரணைகளுக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றோம் - என்றார். (அ-ம-44)

### கடந்தகாலத்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஜெனீவாவில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது. இவ்வாறான பின்னணியில், இலங்கைக்கான தனது அண்மைய பயணத்தின் அவதானிப்புக்களை அடிப்படையாக வைத்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:-

வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட காணிகளை விடுவித்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்தல் மற்றும் நீண்டகாலமாக அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவித்தல் ஆகிய செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

சுயாதீனமான அரச வழக்குத்தொடுநர் அலுவலகத்தை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையை வரவேற்கும் அதேவேளையில், சிவில் சமூகத்தின் மீதான தொடர்ச்சியான துன்புறுத் தல், தன்னிச்சையான கைதுகள், சித்திரவதை மற்றும் காவலில் வைக்கப்பட்ட மரணங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் கரிசனைக்கு உரியவை.

அதேநேரம், காணாமல் போனவர்களின் குடும்பங்களைக் கண்காணிப்பது மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து தன்னிச்சையான கைதுகள் குறித்தும் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். சித்திரவதை மற்றும் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் மரணங்கள் தொடர்பான வழக்குகளையும் நாம் கவனத்தில் கொண்டுள்ளோம்.

இலங்கையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாட்டை உடனடியாக நிறுத்தி வைப்பது அவசியமாகும். தேசிய ஒற்றுமை மற்றும் கடந்த கால துஷ்பிரயோகங்கள் மீண்டும் நிகழாமை என்பன, உண்மையான பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளுக்கான மரியாதை ஆகியவற்றில் சார்ந்துள்ளது. இராணுவமும், புலிகளும் தம்மீதான குற்றங்களை தாமதமின்றி ஒப்புக்கொள்ள வேண்டும் - என்றுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றவாளிகள்...

இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியில் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வொன்று நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணி உரிமம் வழங்கும் வேலைத்திட்டத்தை வடக்கில் இருந்தே ஆரம்பித்துள்ளோம். வடக்கு மக்களின் வாழ்வில் என்றைக்கு வசந்தம்துளிர்விடுகின்றதோ அன்றுதான் எமது வாழ்விலும் வசந்தம் ஏற்படும். ஏனெனில், இது மக்களுக்கான அரசாங்கமாகும்.

ரணிலுடன்இருக்கும்போதுசுமந்திரனுக்கு இராணுவம் நல்லது. யாழ்ப்பாணம் நூலகத்தை எரித்த பாவிகளின் பைல்களை தூக்கிக்கொண்டு திரியும்போது தமிழ் மக்களின் பிரச்சினை அவருக்குத் தெரியவரவில்லை. ஆனால் இன்று அவர் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கின்றார். மட்டக்களப்பில் 10, 15 பேரை அழைத்து சாணக்கியன் இன்று ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார். அவர் நாமல் ராஜபக்சவின் நீலப்படையணியில் இருந்த ஒருவராவார். கடந்தகால கொலைகள் தொடர்பில் கண்டறியப்படவேண்டும். அதனால்தான் செம்மணிப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணி மற்றும் விசாரணைக்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்பு வழங்கிவருகிறது. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக் கிடையாது. குற்றவாளிகளை நாங்கள் கண்டுபிடித்துத் தண்டிப்போம். மாறாகக் காப்பாற்றமாட்டோம். காற்றாலை மின் உற்பத்திக்கு கடந்த காலங்களில் இந்தப் பாவிகள்தான் காணி வழங்கினார்கள். அதற்குரிய அனுமதியையும் இந்தப் பாவிகளே வழங்கினர். கனியமணல் அகழ்வுக்கும் ராஜபக்ச, ரணில் ஆட்சியில் அமைச்சராக இருந்த பாவிகள்தான் அனுமதி வழங்கினர் - என்றார். (அ-ம-26)

## வலி. வடக்குக்...

ஈடுபடுவதற்கு உதவவேண்டும் என்று ஜனாதிபதி அநுரவிடம் காணிகளின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தம் முடிந்து 16 வருடங்கள் ஆகின்றன. எம்மிடம் இருந்து பறிக்கப்பட்ட காணிகளை மீண்டும் எம்மிடத்தில் ஒப்படைக்காமல் படையினர் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். ஆனால், நாங்களோ காணிகளை இழந்துவிட்டு தினக்கூலிகளாக வாழ்ந்துவருகின்றோம். இராணுவத்தினர் விவசாயம் செய்து வாழ்வதற்கு எமது காணிகள்தான் கிடைத்தனவா?

எமது காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும். நாங்கள் காணிகள் இல்லாதவர்களாக அங்கலாய்த்துத் திரியும்போது எமது காணிகளில் பண்ணைகளும் வியாபாரங்களும் நடத்தி இராணுவத்தினர் இலாபம் பார்ப்பது எவ்வகையில் நியாயம்? - என்றனர். (அ-ம-இ)

## தென்னிலங்கை...

களாலும் தாம் பெரும் துன்பங்களை எதிர்கொள்வதாக வடமாகாண மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே, மயிலிட்டித் துறைமுகம் தம்மிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளதாகவும், அதைத் தம்மால் பயன்படுத்த முடியாதுள்ளதாகவும் வடக்கு மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மீனவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

மயிலிட்டித் துறைமுகத்தை சீரமைத்துத் தரும்போது, அதன்மூலம் வடக்கு மக்களின் வாழ்வாதாரம் மேம்படும், வடக்கு மீனவர்களின் பொருளாதாரம் உயரும் என்றெல்லாம் கூறினார்கள். ஆனால், அந்தத் துறைமுகத்தின் முழுப் பயனையும் தென்னிலங்கை மீனவர்கள்தான் அனுபவிக்கின்றனர்.

வடக்கு மீனவர்களின் படகுகள் கட்டுவதற்குப் போதிய இடமில்லை. மிகச் சிறிய இடமொன்றேவழங்கப்பட்டுள்ளது. இந்திய மீனவர்களின் அத்துமீறல்களின்போது அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட றோலர் படகுகளும் அங்கே கட்டப்பட்டுள்ளன. அவையும் எமது சிறிய படகுகளுடன் மோதி பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றன - என்றனர்.

இதையடுத்து, ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் முடிந்ததும், மயிலிட்டித் துறைமுகத்துக்குக் கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள களநிலைமைகளைப் பார்வையிடவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார். இதற்கு அமைய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், வலிகாமம் வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான ஸ்ரீபவானந்தராஜா, வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் திருமதி சி.சுதீஸ்னர், வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் சி.சிவானந்தன், வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் தெல்லிப்பழைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் நேரடியாகக் களவிஜயம் செய்து நிலைமையை ஆராய்ந்தனர். (அ-ம-66)

## மயிலிட்டி...

களின் பின்னர் பொங்கல் பொங்கி படையலிடப்பட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் மீது 1990ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக மயிலிட்டி கிராமம் உள்ளிட்ட பல கிராம மக்கள் இரவோடு இரவாக தமது பூர்வீக இடத்தை விட்டு அகதிகளாக துரத்தியடிக்கப்பட்டனர். இதன் போது வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள் என கோடான கோடி ரூபா பெறுமதியாக சொத்துகளை விட்டு விட்டவாறே மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.

அவ்வாறே பருத்தித்துறை-பொன்னாலை பிரதான வீதியோரமாக ஐந்து தளங்களைக் கொண்ட இராசகோபுரத்துடன் அமைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மயிலிட்டி அருள்மிகு வரசித்தி விநாயகர் ஆலயமும் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்டு இன்றுவரை விடுவிக்கப்படாதுள்ளது.

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காலத்தில் குறித்த ஆலயம் முற்றிலுமாக இடித்தழிக்கப்பட்டு அந்த பகுதியில் பாரிய இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலய தீர்த்தக் கிணறு மட்டும் சிதைவுகளுடன் எஞ்சியுள்ள நிலையில் இராணுவத்தின் முள்வேலிக்கு முன்பாக அண்மையில் ஆலயத்தின் பழைய தோற்றத்துடன் கூடிய பதாகை வைக்கப்பட்டு அதற்கு முன்பாக பிள்ளையார் சிலை ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் குறித்த ஆலயத்தின் பூசகராகச் செயற்பட்டு வந்தவரை தேடிப்பிடித்து அழைத்துவந்து கடந்த செவ்வாய்க்கிழமை சதுர்த்தி தினத்தை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

தங்கள் இஷ்ட தெய்வமான வரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ள இடம் மிக விரைவில் விடுவிக்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என பூசை வழிபாடுகளில் பங்கேற்றிருந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-100)

## வனவளத்...

எது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் பொது மக்கள் சிலர் இணைந்து காணியில் அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது, அந்தக் காணிக்குச் சென்றவனவளத்திணைக்கள அதிகாரிகள், 'அரச காணிக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில்' ஒருவரைக் கைதுசெய்தனர். இதன்போது, காணியின் உரிமையாளர் எனத்தன்னை அடையாளப்படுத்திய நபர், வனவளத் திணைக்களத்தின் அத்துமீறலுக்கு எதிராகவும், நபரொருவர் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிராகவும் வனவளத் திணைக்கள அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. அத்துடன், வனவளத் திணைக்கள அதிகாரிகள் தன்னைத் துப்பாக்கிமுனையில் மிரட்டினார்கள் என்று காணியின் உரிமையாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, வாக்குவாதத்தில் ஈடுபட்ட நபருக்கு எதிராக, அரச கடமைக்கு இடையூறு செய்த குற்றச்சாட்டின் கீழ் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா - ஓமந்தை உட்பட பல்வேறு பகுதிகளில் மக்களின் பாரம்பரியக் காணிகளில் வனவளத் திணைக்களம் எல்லைக்கற்களை நட்டு, தமது ஆளுகைக்கு உட்பட்ட இடமென சட்டவிரோதமாக அடையாளப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## பிரபல...

தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் உள்ள பிரபல மகளிர் பாடசாலையொன்றின் அதிபர் நியமனத்தில் பெரும் முறைகேடு இடம்பெற்றுள்ளது என்றுசிவசேனை அமைப்பால் வடக்கு மாகாண ஆளுநரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதையடுத்து, ஆளுநர் அலுவலகத்துக்கு வழங்கியுள்ள விளக்கக் கடிதத்திலேயே, நியமனம் சரியானது என்றும் தகவல் வழங்கும் அலுவலர் ஒருவரின் தவறால் இந்த விடயம் சர்ச்சையாகியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஆளுநர் அலுவலகத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தின் சாராம்சமாவது:-

கிளிநொச்சியில் உள்ள பிரபல மகளிர் பாடசாலையொன்றின் அதிபர் பதவிக்குப் பொருத்தமான நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் அண்மையில் கோரப்பட்டிருந்தன. இந்த நியமனத்துக்காக ஏழு பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் நால்வரின் விண்ணப்பம் தற்போதைய பாடசாலையில் அதிபராக மூன்று வருடகால சேவையை நிறைவு செய்யாமை, மூன்று வருடங்கள் சேவையாற்றக்கூடிய வயதெல்லையைக் கடந்துள்ளமை, மிகை ஆளணியின் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளமை ஆகிய காரணங்களால் நிராகரிக்கப்பட்டன.

ஏனைய மூவருக்கும் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டது. அவர்கள் மூவருமே மூன்றாம்தரநிலை அதிபர்களாவர். அவர்களில் நேர்முகக் குழுவினர் வழங்கிய புள்ளிகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே, குறித்த மகளிர் பாடசாலைக்குப் புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், நேர்முகத்தேர்வுக்கு விண்ணபிக்காத நபர் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று வெளிவரும் தகவல்கள் தவறானவை. யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் 'தகவல் வழங்கும் அலுவலர்' குறித்த நியமனத்துக்கு விண்ணப்பித்த அலுவலரின் பெயருக்குப் பதிலாக விண்ணப்பிக்காத அலுவலர் ஒருவரின் பெயரை தகவல் கோருநருக்கு வழங்கியுள்ளார். இந்தப் பொறுப்பற்ற செயற்பாடே இந்தச் சர்ச்சைகளுக்கு மூலகாரணம். ஆதலால், அந்த அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றவாறாகவுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

*'கிளிநொச்சி பிரபல மகளிர் பாடசாலையின் அதிபர் நியமனத்தில் முறைகேடு ஆளுநரிடம் முறைப்பாடு' என்று உதயனின் நேற்றைய பதிப்பில் வெளியான செய்திக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.*

*ஆளுநரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவும், அவ்வாறான முறைப்பாட்டில் இணைக்கப்பட்டிருந்த தரவுகளின் அடிப்படையிலேயே இந்தச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.*

*இந்தச் சம்பவம் தொடர்பில் ஆளுநர் திணைக்களம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிடம் விளக்கம் கோரியுள்ளது. அந்த அறிக்கையில் அனைத்து விடயங்களும் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.* (அ-ம)

## முத்துஐயன்கட்டு....

அவர்கள் யாராக இருப்பினும் அவர்களை நீதியின் முன் நிறுத்துவது எமது பொறுப்பாகும் - இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு இராணுவமுகாமில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் தற்போது விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. இளைஞர்கள் அத்துமீறித்தான் உள்நுழைந்தனர் என்பது அனைவருக்கும் தெரியும்.

அங்கு நீண்டநாள்களாக இரும்புத்திருட்டும், இரும்புக் கடத்தலும் இடம்பெற்றுள்ளன. இந்த இரும்புக் கடத்தலில் மூன்று இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்று முதற்கட்டத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், விசாரணைகள் தொடர்ந்துவருகின்றன. இந்த விடயத்தில் உண்மை கண்டறியப்பட்டு அது வெளிப்படுத்தப்படும் - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் காற்றாலைத் திட்டம் ஒரு மாதத்துக்கு இடைநிறுத்தும்

## ஜனாதிபதியுடனான சந்திப்பில் தீர்மானம்

**கொழும்பு, ஓக. 14**


**மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்திக் கோபுரங்களை அமைக்கும் திட்டத்தை ஒருமாத காலத்துக்கு இடைநிறுத்தி வைப்பதுடன், அதற்குள் குறித்த காற்றாலைத் திட்டம் தொடர்பாக மன்னார் மக்களின் அபிப்பிராயங்களைப் பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**



மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்திக் கோபுரங்களை அமைக்கும் சர்ச்சைக்குரிய விவகாரம் தொடர்பில், ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினர் நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின்போதே, ஒரு மாத காலத்துக்குக் காற்றாலைத் திட்டத்தை நிறுத்தி வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், பத்மநாதன் சத்தியலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான், ரிஷாத் பதியுதீன், உபாலி சமரசிங்க, மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-246)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க்கந்தனின் உற்சவ காலத்தில் ஆலய வீதியில் தினமும் மணலில் சிற்பங்கள் வரையப்பட்டுவருகின்றன. கடந்த 15ஆம் நாள் திருவிழாவில் ஆலய வீதியில் உமாதேவியார் லிங்கத்துடன் இருக்கும் சிற்பம் வரையப்பட்டது. (ச-41-17)



# மடு ஆலயம் நோக்கிய பாதயாத்திரைகள்!

மடுமாதா ஆலயத்தின் ஆவணித் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளநிலையில் வடக்கு மாகாணத்தின் பல பாகங்களில் இருந்தும் மடுத் திருத்தலம் நோக்கிய பாதயாத்திரையில் பக்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கரவெட்டி, துன்னாலை சதாசகாய மாதா ஆலயத்திலிருந்து கடந்த 8ஆம் திகதி நடைபயணம் மேற்கொண்டிருந்த பக்தர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நட்டாங்கண்டல் பகுதியை வந்தடைந்தனர்.

அதேவேளை, முல்லைத்தீவு,இரணைப்பாலை, வற்றாப்பளைப் பகுதிகளில் இருந்து பெருமளவு மக்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவுசெய்ய நடைபயணம் மேற்கொண்டுள்ளனர்.

நடைபயணத்தில் கலந்துகொண்டுள்ள யாத்திரிகர்களின் சிரமம்கருதி குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை மாந்தை கிழக்குப் பிரதேசசபை மேற்கொண்டுவருகிறது. (ச-25)

# நாட்டைப் பாதுகாக்க எதிரணி ஒன்றிணைக

## பெரமுன அழைப்பு

கொழும்பு, ஓக.14

தாய்நாட்டைப் பாதுகாக்க எதிரணிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று ஶ்ரீலங்காப் பொதுஜன பெரமுனக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் உறுப்பினர் முன்னாள் அமைச்சர் சி.பி. ரத்நாயக்க, நாட்டு மக்களுக்குத் தலைமைத்துவம் அவசியம். எனவே, நாம் கூட்டு எதிரணியாகச் செயற்படுவோம். முதலில் ஒன்றிணைவோம். அதன்பின்னர் பயணத் தைத் தீர்மானிக்கலாம்- என்றார். (ச-44)



# இலவச காணிப்பத்திரங்கள் கிளிநொச்சியில் கையளிப்பு

கிளிநொச்சி, ஓக.14

ஹிமிகம எனும் திட்டத்தின் 'வளமான நாடு அழகிய வாழ்வு' எனும் தொனிப்பொருளில் நேற்று இலவச காணிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு பளை மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இதன்போது பல காலமாக காணிக்கான பத்திரங்கள் இல்லாமல் கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் 332 காணி உரிமையாளர்களுக்கு காணிப் பத்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ.லால் காந்த, காணி நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க, கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர், மாவட்டச் செயலர்கள், வடக்கு மாகாண ஆளுநர், நாடாளுமன்றஉறுப்பினர் இளங்குமரன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27,113,66)

# ஹரிணியே பிரதமர்; பிளவு எம்மிடமில்லை

## பிமல் தெரிவிப்பு



எம்மிடையே எந்தவொரு விடயத்துக்கும் பிரச்சினை கிடையாது. ஜனாதிபதி அநுர போன்றே எமது அரசியல் இயக்கத்தில் உள்ள சிறந்த வளம்தான் பிரதமர் ஹரிணி அமரசூரிய. எனவே, நாம் ஒற்றுமையுடனேயே செயற்பட்டுவருகின்றோம். எம்மிடையே எவ்வித முரண்பாடும் கிடையாது என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் பதவியில் இருந்து ஹரிணி அமரசூரிய நீக்கப்பட்டு, அப்பதவிக்கு பிமல் ரத்நாயக்க நியமிக்கப்படவுள்ளார் என சமூகவலைத்தளங்களில் தகவல்கள் கசிந்துள்ளன. எம்மிடையே பிளவு எனக்கூறி சஜித், நாமல் ஆகியோர் அழுது புலம்பிவருகின்றனர். அவர்கள் அணிக்குள்தான் பிளவு உள்ளது. இந்த ஆட்சி கவிழாது. தோல்விகளில் இருந்து மீண்டுவந்தவர்களே நாம். எனவே, எம்மிடையே எந்தவொரு பிரிவினையும் கிடையாது நாம் எமது பிரதமரையும் பாதுகாப்போம். பிரதி அமைச்சரையும் நாம் பாதுகாப்போம் - என்றார். (ச-44)

**பணியாளர் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு உணவு பரிமாறுதல் வேலையில் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.

தொடர்பு:
077 6491 027

(CR 45808) A

**விற்பனையாள் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு விற்பனையாளர் தேவை.
20 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆண்.பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:- 071 664 7692

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org